# (Unit – IX Development Administration In Tamil Nade)

# 10th vol –I- புவியியல்

## அலகு-5 இந்தியா - மக்கள்தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு, மற்றும் வணிகம்

### மனிதவள மேம்பாடு

- டாக்டர் மெகபூப்-உல்-ஹக் என்ற பொருளாதார நிபுணரின் கூற்றுப்படி, "மனிதவள மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், வருமானம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் ஒரு செயல் முறையாகும். இது பௌதீக சூழலிருந்து பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சுதந்திரம் போன்றவைகளில் மனித விருப்ப வரம்புகளின் அதிகரிப்பதையும் உள்ளடக்கியதாகும்.

### மனித வளர்ச்சி குறியீடுகள் (UNDP)

- மக்கள் தொகை போக்குகள், ஆரோக்கிய வெளிப்பாடு, கல்விச் சாதனைகள், தேசிய வருமானம், வள-கூட்டமைப்பு, தொழில், வேலைவாய்ப்பு, மனித பாதுகாப்பு, மனித மற்றும் முதலீட்டு ஈர்ப்பு ஆகியன மனிதவள வளர்ச்சியின் குறியீடுகளாகும். நல்வாழ்வியல், உணர்வு மற்றும் அடிப்படை உரிமை ஒப்பந்தங்கள் ஆகியன மனித வள மேம்பாட்டு துணைக் குறியீடுகளாகும்.

### மனிதவள மேம்பாட்டினை அளவிடுதல்

- மனிதவள மேம்பாடு என்பது மூன்று அடிப்படை பரிமாணங்களைக் கொண்ட ஒரு கூட்டுக் குறியீடாகும்.

  1. ஆரோக்கியம் - பிறப்பு காலத்தில் - சராசரி வாழ்நாள் மதிப்பீடு.

2. கல்வி – பள்ளி செல்லும் குழந்தைகளின் படிப்பு காலம், வயது வந்தோர் சராசரியாக பள்ளிகளில் கற்கும் காலம்.
3. வருமானம் - நிகர தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானம்.

**மனிதவள மேம்பாட்டு வகைப்பாடு**

- மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு (HDI) வகைப்பாடு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டு புள்ளிகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இது கால்மான விளக்கப் பரவல் குறியீடுகளிலிருந்து பெறப்படுகிறது.

**வகைப்பாடு**

HDI 0.550 குறைந்த மனிதவள மேம்பாடு

HDI 0.550 – 0.699 மிதமான மனிதவள மேம்பாடு

HDI 0.700 – 0.799 அதிக மனிதவள மேம்பாடு மற்றும்

HDI 0.800 அதற்குமேல் மிக அதிக மனிதவள மேம்பாட்டைக் குறிக்கிறது.

---

# 10th பொருளாதாரம்

# தொகுதி -1

# அலகு–1 – மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்

**பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்:**

- பொருளியல் அறிஞர் அமர்த்தியா சென் கருத்துப்படி, பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றத்தின் ஓர் அம்சமாகும். பொருளாதார வளர்ச்சி மனிதனின் பொருள்சார் தேவைக்கு மட்டும் கவனம் செலுத்துகிறது. ஆனால், ஐக்கிய நாடுகளின் பார்வையில், பொருளாதார வளர்ச்சி என்பது வாழ்க்கை தரம் உயர்தல் அல்லது ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்துதலாகும்" என்று கூறுகின்றது.

- ஒரு பொருளாதாரத்தில் அல்லது நாட்டின் உற்பத்தியில் அதன் குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி உயர்வு எனக் கருதப்படும் பண மதிப்பு அளவு கோல் ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகிய இரண்டும் பொருளாதார வளர்ச்சியை கணக்கிடும் முக்கிய அளவுகோல் மேலும் ஒரு பொருளாதாரத்தின் உண்மையான அளவை கணக்கிட இது உதவுகிறது.

- எடுத்துக்காட்டாக இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 2.8 டிரில்லியன் ருளுனு (அமெரிக்க டாலரில்) பெற்று உலகத்தில் 6வது தரவரிசையில் உள்ளது. அதே சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு 19 டிரில்லியன் USD பெற்று 1 வது தரவரிசையில் உள்ளது. இது சென்ற ஆண்டை விட எவ்வளவு பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி அதிகரித்துள்ளன என்பதை ஒப்பீட்டளவில் அளவிட பயன்படுகிறது. அதனை அளவிடுவதற்கான அளவீடுகள், மனித வளம் இயற்கை வளங்கள், தொழில் நுட்பத்தில் முன்னேற்றம். மூலதன அமைப்பு அரசியல் மற்றும் சமூக பொருளாதார காரணிகள் போன்றவைகளாகும்.

**பொருளாதார முன்னேற்றம்:**

- ஒரு பொருளாதாரத்தின் பந்த முறையில் தெளிவான உருவத்தை பொருளாதார முன்னேற்றம் காண்பிக்கிறது. உற்பத்தி நிலையை அல்லது பொருளாதாரத்தின் வெளியீட்டை அதிகப்படுத்துவது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவது ஆகியவை இதில் அடங்கும். இது உற்பத்தி அளவு அதிகரிப்பதை மட்டுமில்லாமல், சமூக பொருளாதார காரணிகளுக்கு அதிக

முக்கியத்துவம் கொடுத்துள்ளது. தொழில் நுட்ப மேம்பாடு, தொழிலாளர் சீர்திருத்தம், வாழ்க்கைத் தரத்தை அதிகப்படுத்துவது, பொருளாதார அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகிய தரமான அளவுகளை அளப்பதே பொருளாதார முன்னேற்றமாகும்.

ஒரு பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு மனிதவள மேம்பாடு குறியீடு (HDI) சரியானதாகும்.

**பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உள்ள வேறுபாடு:**

| **பொருளாதார வளர்ச்சி பொருளாதார முன்னேற்றம் ஒப்பீடு** | **பொருளாதார வளர்ச்சி** | **பொருளாதார முன்னேற்றம்** |
|---|---|---|
| கருத்து | பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து | பொருளாதார முன்னேற்றம் ஒரு “பரந்த கருத்து” |
| வரையறை / பொருள் | ஒரு குறிப்பிட்டகாலத்தில் ஒரு பொருளாதாரத்தில் வெளியிட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும் | இது பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDI யின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது |
| அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| நோக்கம் | GDP, GNP, FDI, FII போன்ற அளவுகள் அதிகரிக்கும் | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம் |
| கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது |
| பொருந்தும் தன்மை | வளாந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல் அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை |
| நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| அரசாங்க உதவி | இது ஒரு தானியங்கி செயல்முறையாகும். எனவே, அரசாங்க உதவி / ஆதரவு அல்லது தலையீடு | அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை |

| | | |
|---|---|---|
| | தேவைப்படாது | உள்ளடக்கியுள்ளது. எனவே, அரசாங்கத் தலையீடு இல்லாமல் அது சாத்தியமே இல்லை. |
| **செல்வ பகிர்வு** | பொருளாதார வளர்ச்சி அனைத்து மக்களிடையேயும் செல்வம், வருமானத்தை நியாயமாக மற்றும் சமமாக மற்றும் சமமாக விநியோகிக்கப்படுவதில்லை | இரு ஒரு சம நிலையில் கவனம் செலுத்துகிறது. அனைத்து தனிநபர்களிடையே செல்வத்தை சமமாக விநியோகிப்பது சமூகங்கள் மேம்படுத்துவதற்கு முயற்சிக்கிறது. |

**மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI):**

- மனித மேம்பாட்டுக் குறியீடு என்பது 1990 ம் ஆண்டு பாகிஸ்தானின் முகஹுப் 0 உல். ஹிக் என்ற பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம், GDP யின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு, வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

- UNP யில் வெளியிடப்பட்ட சமீபத்தில் மனித வளர்ச்சி மதிப்பீடுகளில் இந்தியா 189 நாடுகளில் 130 வது இடத்திற்கு உயர்ந்துள்ளது என வெளியிட்டுள்ளது. இந்தியாவின் 2017 ன் HDI யின் மதிப்பு 0.640 இது நாட்டை நடுத்தர மனித மேம்பாட்டு பிரிவின் கீழ் இடம் பெற வைக்கிறது. 1990 – 2017 ன் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் HDI யின் மதிப்பு 0.427 லிருந்து 0.640 ஆக உயர்ந்தது. இது கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகரித்து, மில்லியன் மக்களின் வறுமையை போக்கி நாட்டின் குறிப்பிடத்தக்க குறியீடாக உள்ளது.

- 1990 – 2017 ன் இடைப்பட்ட காலத்தில் பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு 11 Mżடுகள் அதிகரித்து பள்ளியின் எதிர் பார்ப்பு ஆண்டுகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு சாதமாகயுள்ளது. 1990 ம் ஆண்டுகளை விட இன்று இந்தியாவில் பள்ளி செல்லும் குழந்தைகள் 4.7 ஆண்டுகள் அதே சமயம் 1990 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் GSI 266.6 சதவீதம் அதிகரித்துள்ளது.

# 10ம் வகுப்பு

# தொகுதி- 1

# அலகு – 5 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

**தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தவாதிகள்**

**(அ) இராமலிங்க சுவாமிகள்**

- வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட, ராமலிங்க சுவாமிகள் அல்லது ராமலிங்க அடிகள் (1823-1874) சிதம்பரத்திற்கு அருகேயுள்ள மருதூர் எனும் கிராமத்தில் பிறந்தார். தந்தையாரின் மறைவுக்குப்பின்னர் அவரது குடும்பம் சென்னையிலிருந்த அவருடைய சகோதரரின் இல்லத்திற்குக் குடிபெயர்ந்தது. முறையான கல்வியை அவர் பெற்றிராவிட்டாலும் அளப்பரியப் புலமையைப் பெற்றிருந்தார். உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் எனும் பிணைப்புகள் இருக்கவேண்டுமென்றார். ‘‘துயரப்படும் உயிரினங்களைப் பார்த்து இரக்கம் கொள்ளாதாவர்கள் கல் நெஞ்சக்கார்கள், அவர்களின் ஞானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும்’’ எனும் கருத்தினை முன்வைத்தார். அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார். 1856இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரசசுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1866இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார். அவர் இயற்றிய ஏராளமான பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன. அவருடைய தீவிரமான சிந்தனைகள் பழமைவாத சைவர்களை ஆழமாகப் புண்படுத்தியதால் அவர்கள் வள்ளலாரின் பாடல்களை ‘மருட்பா’ (அறியாமையின் பாடல்கள்) எனக் கண்டனம் செய்தனர்.

நாட்டில் நிலவிய பசிக்கும் வறுமைக்கும் ராமலிங்கர் சாட்சியாய் இருந்தார். ‘‘பசியினால் இளைத்துப்போன, மிகவும் சோர்வுற்ற ஏழைமக்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லுவதை நான் பார்த்தேன். இருந்தும் அவர்களின் பசி போக்கப்படவில்லை என் இதயம் கடுமையாக வேதனைப்படுகிறது. கடுமையான நோயினாவல் வேதனைப்படுபவர்களை எனக்கு முன்பாகப் பார்க்கிறேன். எனது இதயம் நடுங்குகிறது. ஏழைகளாகவும் இணையில்லா நன்மதிப்பையும் களைப்படைந்த இதயத்தையும் கொண்டுள்ள அம்மக்களை நான் பார்க்கிறேன்,

| |
|---|
| நான் பலவீனம் அடைகிறேன்.'' |

**(ஆ) வைகுண்ட சுவாமிகள்**

- தென்னிந்தியாவின் தொடக்கக்காலச் சமூகத்தின் போராளிகளில் ஒருவரான வைகுண்ட சுவாமிகள் (1809-1851) கன்னியாகுமரிக்கு அருகில், இன்று சாமித்தோப்பு என்றழைக்கப்படும் சாஸ்தாகோவில்விளை எனும் கிராமத்தில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் முடிசூடும் பெருமாள். இப்பெயருக்கு உயர்சாதி இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அவரின் பெற்றோர் அவருடைய பெயரை முத்துக்குட்டி என மாற்றினார். முத்துக்குட்டிக்கு முறையான பள்ளிக் கல்வியைப் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனாலும் பல சமயநூல்கள் குறித்த புலமையை அவர் பெற்றிருந்தார். திருவிதாங்கூர் அரசின், உயர்சாதியினரின் கடுமையான எதிர்ப்புகளிடையே அனைவரும் சமம் எனும் கருத்தினைப் போதித்தார். அடித்தட்டு மக்களின் உரிமைகளை ஆதரித்தார்.

| |
|---|
| வைகுண்டசுவாமிகள் ஆங்கில ஆட்சியையும் திருவிதாங்கூர் அரசரின் ஆட்சியையும் முறையே ''வெள்ளைப் பிசாசுகளின் ஆட்சியென்றும்'' கறுப்புப் பிசாசுகளின் ஆட்சியென்றும்'' விமர்சித்தார். |

- திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்றிருந்த அவர் தெய்வீக அனுபவம் ஒன்றைப்பெற்றார். வைகுண்டர் என தன்னை அழைத்துக் கொண்ட அவர் வழிபாட்டின் போது பின்பற்றும் தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்களைக் கைவிடும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார். நடைமுறையிலுள்ள சமயநெறிமுறைகளுக்கு எதிரான அவருடைய போதனைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1833ஆம் ஆண்டு சாதிவேற்றுமைகளை ஒழிப்பதற்காகவும் சமூக ஒருங்கிணைப்புக்காகவும் சாமித்தோப்பில் தனது தியானத்தைத் துவக்கினார். அந்நாட்களில் துறவியைப் போன்றதொரு வாழ்க்கைய வாழ்ந்தார்.

- தெற்கு திருவிதாங்கூரில் ஒடுக்கப்பட்ட மக்கள் எவற்றை அணியலாம்; எவற்றை அணியக் கூடாது என்பது உட்பட பல கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியிருந்தனர். சுமூகத்தின் சில குறிப்பிட்டப் பிரிவுகளைச் சேர்ந்து மக்கள் தலைப்பாகை அணியக்கூடாது என்றிருந்த நிலையில் வைகுண்டர் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அம்மக்களைத் தலைப்பாகை அணியும்படி கூறினார். இது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திர உணர்வை வழங்கியதோடு அவர்களுக்குச் சுயமரியாதை சார்ந்த ஊக்கத்தையும் கொடுத்தது. அவரைப் பின்பற்றுவோரின் மனங்களில் புதிய நம்பிக்கை ஊன்றப்பட்டது.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரங்கேறிய ஏனைய சமகாலச் சீர்திருத்த இயக்கங்களைப் போலவே வைகுண்டசுவாமிகளும் உருவவழிபாட்டை எதிர்த்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் தெய்வங்களுக்கெனக் கோவில்களைப் பெற்றிருக்கவில்லை. தங்கள் தெய்வங்களை மேன்மைப்படுத்தும் பொருட்டு களிமண்ணால் அல்லது செங்கல்லால் சிறியப் பிரமிடுகளைக்கட்டி அவற்றுக்குச் சாந்துபூசி வெள்ளையடித்து வைத்திருந்தனர். அவ்வடிவங்களை வழிபடுவது அநாகரிகமான பழக்கம் என வைகுண்டர் கருதினார். விலங்குகளை வணங்குவதையும் அவர் நிராகரித்தார். வழிபாட்டின்போது மக்கள் ஆடுகள், சேவல்கள், கோழிகள் ஆகியவற்றை பலி கொடுக்கும் சமயச்சடங்குகளைக் கண்டனம் செய்த வைகுண்டசுவாமிகள் விலங்குகளைப் பலியிடுவதற்கு எதிராக இயக்கம் நடத்தினார்.

- பல்வேறு சாதிகளைச்சேர்ந்த மக்களை ஒருங்கிணைப்பதற்காக வைகுண்டசுவாமிகள் சமத்துவ சமாஜம் எனும் அமைப்பை நிறுவினார். அந்நோக்கத்தில் வெற்றிபெறுவதற்காக அனைத்துச் சாதிமக்களும் சேர்ந்துண்ணும் சமபந்தி விருத்துகளை நடத்தினார். திருவிதாங்கூர் அரசரால் சிறையில் அடைக்கப்பட்ட போதும் அவர் தனது கொள்கைகளை விட்டுத்தரவில்லை. அவரைப் பின்பற்றியவர்கள் அவரை மிக்க மரியாதையுடன் ‘அய்யா’ (தந்தை) என அழைத்தனர். அவருடைய சமயவழிபாட்டு முறை ‘அய்யாவழி’ என்றறியப்பட்டது. அவருடைய அறிவுரைகள் நீதிக்குப்புறம்பான சமூகப்பழக்க வழக்கங்களிலிருந்தும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் மக்களை விடுவித்தது. அவருடைய கருத்துக்கள் ஒரு நூலாகத் திரட்டப்பட்டுள்ளது. அந்நூலின் பெயர் ‘அகிலத்திரட்டு’ என்பதாகும்.

### இ) அயோத்தி தாசர்

- பண்டிதர் அயோத்தி தாசர் (1845-1914) ஒரு தீவரத் தமிழ்அறிஞரும் சித்தமருத்துவரும் பத்திரிக்கையாளரும் சமூக அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார். சென்னையில் பிறந்த அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். சரளமாக பேசக் கூடியவர். அது வரையிலும் உயர் சாதியிளரின் ராஜ்ஜியமாக விளங்கிய அச்சிட்டு வெளியிடும் இதழியலைத் தனது கருவியாகக் கொண்டு இதழியலைத் தனது கருவியாகக் கொண்டு அயோத்திதாசர் ஒரு புதிய அறிவைப்பரப்பும் முறையை முன்னெடுத்தார். சமூகநீதிக்காக இயக்கம் நடத்திய அவர், சாதியத்தின் கொடிய பிடியிலிருந்து ஒடுக்கப்பட்டோர் விடுதலைபெறப் பாடுபட்டார். சாதிகளற்ற அடையாளத்தை நிறுவமுயன்ற அவர் சாதிய மேலாதிக்கத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராகக் கண்டனக்குரல் எழுப்பினார். கல்வியை வலிமை பெறுவதற்கான கருவியாகக் கருதிய அவர் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கென பல பள்ளிகள் உருவாக்கப்படுவதற்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தார்.

- ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் அத்வைதானந்தா சபா எனும் அமைப்பை நிறுவினார் 1882இல் அயோத்தி தாசரும் ஜான் திரவியம் என்பவரும் ‘‘திராவிடர்க் கழகம்’’ எனும் அமைப்பை நிறுவினர். மேலும் 1885இல் ‘‘திராவிட பாண்டியன்’’ எனும் இதழையும் தொடங்கினார். ‘‘திராவிட மகாஜனசபை’’ என்ற அமைப்பை 1891இல் நிறுவிய அவர் அவ்வமைப்பின் முதல் மாநாட்டை நீலகரியில் நடத்தினார். 1907இல் ‘‘ஒரு பைசா தமிழன்’’ என்ற பெயரில் வாராந்திரப் பத்திரிகையைத் தொடங்கி அதை 1914இல் அவர் காலமாகும் வரையிலும் தொடர்ந்து வெளியிட்டார்.

- பண்டிதர் அயோத்திதாசர் சாதியத்தைப் பரப்புரை செய்யவும் அதை நியாயப்படுத்தவும் அடித்தளமாக விளங்கிய இந்துதர்மத்தின்பால் மனக்கசப்புற்றார். பிரம்மஞான சபையை நிறுவியவர்களில் ஒருவரான கர்னல் ஆல்காட் ஏற்படுத்தியத் தாக்கத்தின் விளைவாக 1898இல் இலங்கை சென்ற அவர் அங்கே பௌத்தமதத்தின் வழியே பகுத்தறிவின் அடிப்படையிலான சமயத்தத்துவத்தைக் கட்டமைப்பதற்காக ‘‘சாக்கிய பௌத்த சங்கம்’’ எனும் அமைப்பை சென்னையில் நிறுவினார். பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்களே உண்மையான பௌத்தர்கள என அவர் வாதிட்டார். பௌத்தசமய நிலைப்பாட்டிலிருந்து இலக்கியங்களுக்கும் நாட்டார் வழக்காற்றியல் மரபுக்கும் புதிய விளக்கங்கள் கொடுத்த அவர் ஒரு மாற்று வரலாற்றைக் கட்டமைத்தார். மேலும் பௌத்தசமய மீட்பின் வழியாக இந்துசமயத்தைப் பிடித்திருக்கும் சாதியக்கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிக்க இயலுமென உழைத்தார். ஒடுக்கப்பட்டவர்களை சாதி பேதமற்ற திராவிடர் என அழைத்த அவர் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்போது அவர்களைச் சாதியற்ற திராவிடர்கள் எனப் பதிவுசெய்யுமாறு வற்புறுத்தினார்.

# Unit - 10

# தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

**அறிமுகம்:**

- பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பியர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது தங்கள் அரசியல் அதிகாரத்தை நிறுவினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவை இணைப்பதில் அக்கறை செலுத்திய அவர்கள் இந்தியச் சமூகத்தை மறு ஒழுங்கமைவு செய்தனர். புதிய வருவாய் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆங்கிலேயரின் பயன்பாட்டுக் கோட்பாடுகள், கிறித்தவ சமய நெறிகள் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த அவர்கள், இந்திய மக்களின் மீது தங்களது பண்பாட்டு மேலாதிக்கத்தைத் திணிக்கவும் முயன்றனர். இந்தியாவின் உள்நாட்டு மரபுகள், நாகரிகம் பழமையானவைகளாகக் கருதப்பட்டன. இந்தியச் சமூகமானது பழமையானதென்றும் அதில் மனிதர்கள் சாதி, பாலினம், மொழி, நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதாகவும் சித்தரிக்கப்பட்டது.

- இந்நிலை இந்தியர்களிடையே எதிர்விளைவினை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் இந்த அவமானத்தை உணர்ந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தங்கள் சமூகப் பண்பாட்டு அடையாளங்களைக் கடந்த காலத்தினுள் தேடினர். இருந்தபோதிலும் காலனிய விவாதங்களில் சில நியாயங்கள் இருப்பதை உணர்ந்த அவர்கள் சீர்திருத்திக் கொள்ளவும் தயாராயினர். இச்செயல்பாட்டின் முன்னோடிகளுள் ராஜராம் மோகன்ராயும் ஒருவராவார். ரூாய் மற்றும் அவரைப் போன்ற பலரும் சமூகச் சீர்திருத்தவாதிகள் என அறியப்பட்டனர். ஐரோப்பிய பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் ஒரு சமூகப் பண்பாட்டுச் செயற்களத்தை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இதன் விளைவே நவீன இந்தியாவின் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு வழிகோலியது. இக்குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி நிகழ்வு “இந்திய மறுமலர்ச்சி” என அடையாளப்படுத்தப்பட்டது.

- மறுமலர்ச்சியானது ஒரு கருத்தியல் பண்பாட்டு நிகழ்வாகும். அது நவீனம், பகுத்தறிவு, சமூகத்தின் முற்போக்கான இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. திறனாய்வுச் சிந்தனை அதன் வேர்களில் உள்ளது. மானுடப் பகுத்தறிவுடைமையையும் சமத்துவத்தையும் மையமாகக் கொண்ட ஒரு தத்துவ மரபாக இருப்பது அதன் சிறப்பியல்பாகும். மனிதநேயமும், மனிதர்களுக்கு அவர்களின் கண்ணியத்தை மறுக்கிற அடிப்படைவாத மத நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்குவதும், மறுமலர்ச்சியின் அகத்தூண்டுதல்களாகும். மனிதநேயம் எனும் இச்சித்தாந்தம், சமூக வாழ்வு மற்றும் அறிவு ஆகிய

துறைகளோடு மொழி, இலக்கியம், தத்துவம், இசை, ஓவியம், கட்டடக்கலை இன்னபிற போன்ற அனைத்துத் துறைகளிலும் படைப்பாற்றலைத் தூண்டி எழுப்பியது.

**தமிழ் மறுமலர்ச்சி:**

- காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூகப் - பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ் மொழி மற்றும்ட கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச்சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**அச்சு தொழில்நுட்பத்தின் வருகை:**

- ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும். மிக முன்னதாக 1578 இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது. 1709-இல் முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812-ல் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக இக்காலப் பகுதியில் மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை.தாமோதரனார் (1832-1901) உ.வே.சாமிநாதர் (1855-1942) போன்றவர்கள் தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர். சி.வை.தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும். தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வே. சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார். இது தமிழ் மக்களுக்கு தங்களது

பாரம்பரியம் குறித்து வியப்பைத் தந்தது. ஆகவே பண்டைய செவ்வியல் இலக்கியங்கள் மீண்டும் கண்டறியப்பட்டதையும் அவை வெளியிடப்பட்டதையும் தமிழ் மறுமலர்ச்சியின் அடித்தளமாகக் கருதலாம்.

- இவ்வாறு பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறுமரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக கண்டறிந்தனர். அவை மொத்தத்தில் சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படுகின்றன. மொழியியலாளர்களும், வரலாற்று அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையை அங்கீகரித்துள்ளனர். அவை தமிழ் நிலப்பகுதிக்குள் ஆரியர்கள் வருவதற்கு முன்பாகவே ஒரு தனியான, சுதந்திரமான இருப்பைப் பெற்றிருந்தது.

- 1816-இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய F.W. எல்லிஸ் (1777-1819), தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ-ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார். ராபர்ட் கால்டுவெல் (1814-1891) திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856இல் விரிவுபடுத்தினார். திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அடிப்படையான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.

- இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் தமிழ் / திராவிட /சமஸ்கிருதம் /ஆரியம் / பிராமணியம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் தமிழ்மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும்ட அவர்களின் சமூக வாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது எனவும் வாதிட்டனர். தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி.சுந்தரனாரால் (1855-1897) எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்பிக்கப்பட்டுள்ளது.

- தமிழ் மறுமலர்ச்சி பிராமணியத்தின் பண்பாட்டு மேலாதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கியது. இப்போக்குகள் கலைகளிலும் இலக்கியங்களிலும் சமயத்திலும் பிரதிபலித்தது. வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட ராமலிங்க அடிகள் (1823-1874) நடைமுறையிலிருந்த இந்து சமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார். ஆபிரகாம் பண்டிதர் (1859-1919) தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களையும் வெளியிட்டார். சி.வை.தாமோதரனார், உ.வே.சாமிநாதர்,

திரு.வி.கல்யாண சுந்தரம் (1883-1953), பரிதிமாற் கலைஞர் (1870-1903), மறைமலையடிகள் (1876-1950), சுப்பிரமணிய பாரதி (1882-1921), ச.வையாபுரி (1891-1956), கவிஞர் பாரதிதாசன் (1891-1964) ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில், தங்களின் எழுத்துக்கள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்பு செய்தனர். இதே சமயத்தில், பௌத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடியான M. சிங்காரவேலர் (1860-1946) காலனிய சக்தியை எதிர்கொள்வதற்காக பொதுவுடமைவாதத்தையும் சமத்துவத்தையும் வளர்த்தார். பண்டிதர் அயோத்திதாசரும் (1845-1914) பெரியார் ஈ.வெ.ராமசாமியும் (1879-1973) சமூகரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் உரிமைகளுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தனர். இத்துடன் இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மொழி இயக்கங்களான தனித்தமிழ் இயக்கம் மற்றும் தமிழ் இசை இயக்கம் போன்றவைகள் சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு ஆட்படாத தூய தமிழை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தின.

**பரிதிமாற் கலைஞர்: (வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி)**

- வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி (1870-1903) மதுரை அருகே பிறந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட தொடக்க காலத் தமிழ் அறிஞர்களில் ஒருவர். ஆதனால் தனக்கே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ்ப் பெயரைச் சூடிக் கொண்டவர். தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர் அவரே. மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச்செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார். மேலும் இவர் நாவல்களையும் நாடகங்களையும் அதிக எண்ணிக்கையிலான அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார். ஆனால் வருந்தத்தக்க முறையில் 33 ஆண்டுகளே நிறைவு பெற்றிருந்த அவர் இளம் வயதில் இயற்கை எய்தினார்.

**மறைமலை அடிகள்:**

- மறைமலை அடிகள் (1876-1950) தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவும் கருதப்படுகின்றார். சுங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். ஆவர் இளைஞராக இருந்த போது சித்தாந்த தீபிகா எனும் பத்திரிகையில் பணிபுரிந்தார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூாயீல் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் மீது பற்றுக் கொண்டார். அவருடைய ஆசிரியர்களான பி.சுந்தரனார், சோமசுந்தர நாயகர் ஆகிய இருவரும் அவருடைய வாழ்க்கையில் முக்கியச் செல்வாக்கு செலுத்தியோராவர்.

**தனித்தமிழ் இயக்கம்:**

- தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலை அடிகள் ஊக்குவித்தார். இவ்வியக்கம் தமிழ்ப் பண்பாட்டின் மீது குறிப்பாக தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் மொழியின் மீது செல்வாக்குச் செலுத்தும் வேற்று மொழி வார்த்தைகளை அடையாளங்கண்டு அவற்றை அகற்றுகின்ற செயல்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொடங்கப்பட்டிருந்தாலும் தனித் தமிழ் இயக்கம் தொடங்கியது 1916 எனப் பொதுவாக் கூறப்படுகிறது. முறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார். வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார். அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் என்று பெயரிடப்பட்டது. இவ்வியக்கம் தமிழ் சமுதாயத்திலிருந்த இந்தி, சமஸ்கிருதம் மற்றும் பிராமண மேலாதிக்கத்தை விமர்சித்தது. தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ்சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார். இவ்வியக்கம் பிற்காலத்தில் தமிழ் சமூகத்திலிருந்த பிராமணிய மற்றும் சமஸ்கிருத மரபுகளை எதிர்கொண்ட சமூக இயக்கங்களுக்கு வழிவகுத்தது.

**திராவிட இயக்கத்தின் எழுச்சி:**

- இந்தியாவில் பிராமணயர்கள் தங்களது பிறப்பின் அடிப்படையில் சிறந்த சமூக அந்தஸ்தை அனுபவித்தனர் மேலும் மிகப்பெரும் சமூக முன்னுரிமைகளையும் பெற்றிருந்தனர். சென்னை மாகாணத்தில் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசியல், கல்வி மற்றும் அரசாங்க வேலைவாய்ப்புகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்தினார். 1911 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாகாண மக்கள்தொகையில் பிராமணர்களின் எண்ணிக்கை 3 விழுக்காட்டிற்கு சற்றே அதிகமாயும் பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 90 விழுக்காடெனவும் காட்டியது. மேலும் 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த பிராமணர் எண்ணிக்கை 4074 ஆகவும் அதே பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 1035 ஆகவும் இருந்தது. அன்று எவ்வாறு மக்கள்தொகை வகைப்படுத்தப்பட்டிருந்ததோ அதனடிப்படையில் ஏனைய குழுக்களைச் சார்ந்த 306 இந்தியக் கிறித்தவர்களையும் 69 முகமதியர்களையும் 225 ஐரோப்பிய மற்றும் யூரேசியர்களையும் உள்ளடக்கியிருந்தது.

- இத்தகைய சூழலில் திராவிட இயக்கம் பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உதயமானது. 1909இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1912இல் டாக்டர் சி.நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார் இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்று மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது. பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது அவர்களைக் கற்கவைப்பது அகியவற்றோடு அவர்களது குறைபாடுகள் குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது. இதே சமயத்தில் நடேசனார் தங்கும் விடுதி வசதியில்லாததால் பிராமணரல்லாத மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதால் அதைச் சரிசெய்யும் வகையில் திருவல்லிக்கேணியில் (சென்னை) ஜூலை 1916 இல் திராவிட இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார். மேலும் பிராமணர் அல்லாத மாணவர்களின் நலன் கருதி இவ்வில்லம் ஒரு இலக்கிய அமைப்பையும் கொண்டிருந்தது.

**தென்னிந்திய நல உரிமைச்சங்கம் (நீதிக்கட்சி)**

- முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நிலையில் ஆங்கில அரசாங்கம் போருக்குப் பின்னர் இந்தியாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட அரசயில் சீர்திருத்தங்கள் பிராமணர்களின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்யும் என அஞ்சிய கல்வி கற்ற பிராமணர் அல்லாதவர்கள் தங்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டிக் கொள்ள முடிவு செய்தனர். 1916 நவம்பர் 20 இல் டாக்டர் நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லா தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர். இதே சமயம் 1916 டிசம்பரில், விக்டோரியா பொது அரசங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிராமணரல்லாத சமூகங்களின் கருத்துகளைத் தெளிவுபடக்கூறியது. மேலும் சென்னை மாகாணத்தின் பிராமணரல்லாதோர்களின் பொதுவான நிலையை அளவீடு செய்தது.

- இவ்வமைப்பு தொடங்கி வெளியிட்ட மூன்று செய்தித்தாள்களாவன: கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது.

பிராமணர் அல்லாதோர் அறிக்கையில் ‘‘சென்னை மாகாணத்திலுள்ள 4 கோடியே 1 ½ லட்சம் மக்களில் 4 கோடிகளுக்கு குறைவில்லாதவர்கள் பிராமணர்

அல்லாதவர்களே, சென்னை மாகாணத்தின் அரசியல் சூழல் அவர்களை தங்களுக்கு உரிமையுள்ள பங்கினை எடுத்துக் கொள்ள இடமளிக்கவில்லை'' என சுட்டிக் காட்டியது. மேலும் ''ஆங்கில அரசின் உண்மையான நீதி மேலும் வாய்ப்புகளுக்கான சமத்துவம்'' எனும் ஆங்கிலேயக் கொள்கைகளின்படி நடைபெறும் அரசே இந்தியர்களின் நலன்களுக்கு உகந்தது என வாதிட்டு ''நாங்கள் ஆங்கிலேய அரசை ஆழமாக நேசிக்கிறோம் விசுவாதத்துடன் பற்றுக் கொண்டுள்ளோம்'' என்று அறிவித்தது.

- மாகாண அரசுகளில் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்த பின்னர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி தேர்தலில் பெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920-1923 மற்றும் 1923-1926 ஆகிய ஆண்டுகளில் அரமைத்தது. காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937 இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது. 1937 தேர்தல்களில், முதல்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.

**திட்டங்களும் செயல்பாடுகளும்:**

- நீதிக்கட்சியே நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கிற்று. நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள்தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென அடத்தை உருவாக்கியது. தமிழ்நாட்டினுடைய சமூகநீதி மரபுத்தொடர்ச்சியானது தனது இருப்புக்கு, நீதிக்கட்சி உருவாகி வளர்ந்து ஆட்சியிலிருந்த ஆண்டுகளுக்குக் கடமைப்பட்டுள்ளது.

- சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக் கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர். ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன. நீதிக்கட்சியின் கீழிருந்த அம்மையார் சட்டமன்றம்தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921-இல் அங்கீகரித்தது. இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுததியதால் 1926-இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.

- பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது. சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன. நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924-இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது. இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929 இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.

- இவைகள் தவிர சமய நிறுவனங்களை சீர்திருத்துவதிலும் நீதிக்கட்சி கவனம் செலுத்தியது. தமிழ்நாடு பெரும் எண்ணிக்கையிலான கோவில்களைக் கொண்டுள்ளது. அவை பெரும் செல்வவளத்தைப் பெற்றிருந்தன. பொதுவாக இச்சொத்துக்கள் அனைத்தும் சமூகத்தின் உயர்சாதியினரின் முற்றுரிமையில் சுரண்டப்பட்டன. மேலும் இது பொதுச்சொத்துக்கள் தவறாக நிர்வகிக்கப்படுவதற்கு வழி கோலியது. நீதிக்கட்சி 1926-இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

**சுயமரியாதை இயக்கம்:**

- சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement) அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது. சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் மீது அக்கறை கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையம் அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காடடிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது. பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு இயக்கம் நடத்திய சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.

- இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது.

மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது. சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது ‘இனம்’ ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.

- சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது. இந்து சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைகிறார்கள் என்று கருதியது. முஸ்லீம் உயர்குடியினர் தமிழ்நாட்டு முஸ்லீம்களை திராவிடர்களாகவே கருதினர். இருந்தபோதிலும் முஸ்லீம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்யத் தயங்கவில்லை. இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லீம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

**பெரியார் ஈ.வெ.ரா:**

- பெரியார் ஈ.வெ. ராமசாமி (1879-1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார். இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர் சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவார். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளைஞராக இருந்தபோது ஒருமுறை வீட்டைவிட்டு வெளியேறிய அவர் பல மாதங்கள் வாரணாசியிலும் ஏனைய சமயம் சார்ந்த மையங்களிலும் தங்கியிருந்தார். வைதீக இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்தன. வீடு திரும்பிய அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனத்து வந்தார். அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கன. ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918-1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.

- 1917 க்குப் பின்னர் பிராமணரல்லா நீதிக் கட்சியின் எழுச்சிக்குப் பின்னர் சி.ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி.வரதராஜுலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1920-1922) ஆதரவாகத் தான் வகித்துவந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார். லாபம் தரும் தனது வணிகத்தைக் கைவிட்டு செயலார்வமிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆனார். காதிக்கு துணைநின்ற அவர் தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார். மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது

தோப்பிலிருந்து 500 தென்னை மரங்களை வெட்டினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச்சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை வைக்கம் வீரர் எனப் பாராட்டினார். இதே சமயத்தில் சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே.சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது. இதனைப் பெரியார் கண்டித்து எதிர்தத பின்னரும், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்தார்.

- சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார். இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்ற முயற்சி செய்து தோல்வியடைந்தார். இது போன்ற பிரச்சனைகளால் 1925 இல் காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

- பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடியரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும். பிராமணரல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களை அது வெளிக்கொணர்ந்தது, ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

- காலவோட்டத்தின் ஊடாகப் பெரியார் பல நாடுகளுக்குச் சென்றார். அந்நாடுகளைச் சேர்ந்த அறிவார்ந்த மக்களோடு உரையாடினார். சிங்கப்பூர்,

மலேசியா (1929-30, 1954) எகிப்து, சோவியத் ரஷ்ய குடியரசு (தற்போதைய ரஷ்யா), கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் போர்த்துகல் (1931-1932) மற்றும் பர்மா (1954 இல் நடைபெற்ற புத்தரின் 2500 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார்) ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார். சோவியத் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அவர் பெற்ற பயண அனுபவங்கள் அவரை சமதர்மக் கருத்துக்களின்பால் நாட்டம்கொள்ள வைத்தன. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதியுமான சிங்காரவேலருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். B.R.அம்பேத்கர் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார். B.R.அம்பேத்கர் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

- 1937இல் ராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937-1939) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர் நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944இல் திராவிடர் கழகம் (திக) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

- சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி (1952-54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கலிவத் திட்டம் (சாதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை) என விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. கு.காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொண்ணூற்று நான்காவது வயதில் (1973) இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு:**

- தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் வலியுறுத்தினார். பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறுவகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்ததாக அவர் கூறினார். அம்முறை சுற்றுச்சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட

தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினர். வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைபாட்டை மேற்கொள்ள வைத்தது.

**சமயம் குறித்து பெரியார்:**

- முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த நடைமுறைகளான, நம்பிக்கை பண்பாடு, மரவு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார் நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன் வைத்தார். சமயததின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டுமென்றார். “சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை எற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள்” என உறுதிபடக் கூறினார். பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தான் நிறுவிய சிந்தனையாளர் அல்லது பகுத்தறிவாளர்கள் அமைப்புகள் மூலமாக மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் செலவழித்தார். கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார். பிராமண அர்ச்சகர்களையும் வேதச் சடங்குகளையும் புறக்கணிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

**பெரியார், ஒரு பெண்ணியவாதி:**

- பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். 1929 முமதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கம் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். “திருமணம் செய்து கொடுப்பது” எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையாளாள்? என்பதாகும்.

- பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார். சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார். குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.

- 1989 இல் தமிழக அரசு, மாற்றங்களை விரும்பிய சீர்த்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சமஉரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது. முன்மாதிரியாக அமைந்த இந்தச்சட்டம் தேசயி அளவிலும் இது போன்ற சட்டங்கள் இயற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

**இரட்டைமலை சீனிவாசன்:**

- இரட்டைமலை சீனிவாசன் (1859-1945) தாத்தா எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சாதிப்படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காக ராவ்சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களால் அவர் சிறப்புப் செய்யப்பட்டார். அவரது சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் 1939இல் வெளியிடப்பட்டது. இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.

- தீண்டாமையின் கொடுமைகளை அனுபவித்த இரட்டைமலை சீனிவாசன் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். 1893 இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார். ஒடுக்கப்பட்ட மக்களோடு தொடர்புடைய கேள்விகள், பிரச்சனைகள் குறித்து இந்திய தேசியக் காங்கிரஸ் மற்றும் நீதிக்கட்சி தலைவர்களுடன் தொடர்ந்து விவாதித்தார். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளைச் சந்தித்த இரட்டைமலை சீனிவாசன் அவருடன் நெருக்கமானார். 1923இல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரான அவர் நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினை ஏற்படுத்தி ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.

- B.R.அம்பேத்காரின் நெருக்கமானவரான அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற்ற முதல், இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டு சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களுக்காகக் குரல் கொடுத்தார். 1932இல் செய்துகொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.

**மயிலை சின்னதம்பி ராஜா:**

- மயிலை சின்னதம்பி ராஜா (1883-1943) மக்களால் எம்.சி.ராஜா என அழைக்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்களில் முக்கியமானவர். ஒரு ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கிய அவர் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான பல்வேறு பாடப்புத்தகங்களை எழுதினார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவராவார். சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவார் (1920-1926). சென்னை சட்ட சபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவராகச் செயல்பட்டார்.

- பின்னாளில் அவர் நீதிக்கட்சியிலிருந்து விலகினார். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் எனக்கோரிய அவர் பொது நீர்நிலைகள், பாதைகள் முதல் இடுகாடுகள் வரைப் பயன்படுத்தும் எரிமை ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் வேண்டுமெனக் கோரி பல பொதுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தினார். மேலும் ஆதிதிராவிடர், ஆதிஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார். 1928இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார். தொடக்கத்தில் தனித்தேர்தல் தொகுதி வேண்டுமெனக் கோரிய அவர் பூனா உடன்படிக்கைக்குப் பின்னர் அந்நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு கூட்டுத்தொகுதி முறையை ஆதரித்தார்.

**தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்:**

- இந்தியாவில் தொழில்கள் வளர முதல் உலகப்போர் (1914-1918) உத்வேகம் அளித்தது. போர்க்காலத்தேவைகளை நிறைவு செய்துவந்த இத்தொழிற்சாலைகள் மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்தன. போர் முடிவடைந்ததால் போர்காலத் தேவைகளும் குறைந்தன. எனவே, அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆட்குறைப்பு செய்யப்பட்டன. இத்துடன் ஏற்பட்ட விலைவாசி ஏற்றமும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்து சக்தியாக அமைந்தன. அணி திரட்டப்பட்டத் தொழிலாளர்களின் பலத்தை உணர்ந்திருந்த தேசியவாதிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்கத் தொடங்கினார். சென்னை மாகாணத்தில் பி.பி.வாடியா, ம.சிங்காரவேலர், திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்முயற்சி மேற்கொண்டனர். 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் (Madras Labour Union) உருவாக்கப்பட்டது.

- அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் பம்பாயில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் குறித்து பிரதிநிதிகள் விவாதித்தனர். தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு, வேலையில்லாதவர்களுக்கென ஒரு பதிவேட்டைப் பராமரித்தல், உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு, காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை மற்றும் உடல்நலக் காப்பீடு ஆகியவை இவற்றில் அடங்கும். இவைகளைத் தவிர தொழில் முதலாளிகளுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பது போல தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமெனப் பிரதிநிதிகள் கோரினர்.

- சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ம.சிங்காரவேலர் (1860-1946) ஆவார். சென்னையில் பிறந்த அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். இளமைக் காலத்தில் பௌத்தத்தைப் பரிந்துரை செய்தார். அவர் தமிழ், ஆங்கிலம், உருது, இந்தி, ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் ரஷ்யன் என பலமொழிகள் அறிந்திருந்ததோடு காரல் மார்க்ஸ், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஆகியோரின் கருத்துக்களைத் தமிழில் வடித்தவர். 1923இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவரும் அவரே. அவர் இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவராக இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக தொழிலாளன் (Worker) என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். பெரியாரோடும் சுயமரியாதை இயக்கத்தோடும் நெருக்கமாக இருந்தார்.

**இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம்:**

- பொதுவாக, மொழி என்பது அடையாளத்தின் வலிமையான குறியீடாகும், மேலும் இது ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் உணர்வுகளுடன் இயைந்து நிற்பது. தமிழ்மொழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனது மேன்மையை மீட்டுப் பெற்றது. மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்ந்தன. திராவிட உணர்வுக்கு இட்டுச் சென்ற தமிழ் மறுமலர்ச்சி நவீனத் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதன் கலை வடிவங்களுகடைய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்தது. ஆகம கோவில்களில் செய்யப்படும் சடங்குகள் தமிழில் செய்யப்படுவதில்லை. இசை நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்கள் ஓரளவிலான இடத்தையே பெற்றிருந்தன. ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார். 1912இல் தஞ்சாவூர் ‘சங்கீத வித்யா மகாஜன சங்கம்’ என்ற அமைப்பை

ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது. இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது. தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943-இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

- தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இந்தி கட்டாயமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்மொழிக்கும், பண்பாட்டிற்குமான அச்சுறுத்தலாகவே கருதப்பட்டது. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்தார். இது சென்னை மாகாணத்தில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது. தமிழுக்கு மேலாக இந்தியை அறிமுகம் செய்வது திராவிடர்களுக்கான வேலைவாய்ப்புகளை மறுப்பதாக அமையுமென பெரியார் அறிவித்தார். இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக் காட்டினார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் போராட்டத்தை பிராமணியத்திற்கும் தமிழின் மீதான சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திற்கும் எதிரான கருத்தியல் போராகவே கருதினார். பிராமணியத் தத்துவத்தைப் பரப்புவதற்கும் அதன்மூலம் சாதிப்படிநிலைகளையும், பாலின சமத்துவமின்மையையும் பாதுகாப்பதற்குமான வாகனமே சமஸ்கிருதம் என அவர்கள் கருதினர். போராட்டத்தின்போது பெருவாரியான மக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களும், பேரணிகளும், உண்ணாவிரதங்களும் அரங்கேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்போராட்டங்களில் பங்கேற்றனர்.

**பெண்கள் இயக்கங்கள்:**

- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப்பெற்றன. அவைகளுள் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம் (Women's India Association – WIA) அகில இந்தியப் பெண்கள் மாநாடு (All India Women's Conference – ALWC) ஆகியவை முக்கியமானவையாகும். இந்தியப் பெண்கள் சங்கம் (WIA) என்பது 1917இல் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப்பெற்றது. இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் துண்டுப்பிரசுரங்களையும்ட செய்தி மடல்களையும் வெளியிட்டன. இதே சமயத்தில் இந்தியப் பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக 1927இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது. மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.

- பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தோர், பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பணியாற்றினர். தங்களுடைய கருத்துகளைப் பங்கிட்டு கொள்வதற்கான ஒரு இடத்தை பெண்களுக்கு இவ்வியக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வியக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய பெண்கள் பலர் இருந்தனர். முத்துலட்சுமி அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

- கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது அவ்வாறு அர்ப்பணிக்கப்பட்டோர் தேவதாசி என்று அறியப்பட்டனர். கடவுளுக்குச் செய்யப்படும் சேவை எனும் நோக்கில் அமைந்திருந்தாலும் நாளடைவில் இம்முறை பெரும் ஒழுக்கக்கோட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது. இத்தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர்.முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார். மதராஸ் (அர்பணிப்பைத் தடுத்தல்) தேவதாசி சட்டம் 1947 எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.

| |
|---|
| 1930இல் சென்னை சட்டமன்றத்தில் முத்துலட்சுமி அம்மையார் ‘‘சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களுக்குப் பெண்கள் அர்பணிக்கப்படுவதை தடுப்பது’’ எனும் மசோதாவை அறிமுகப்படுத்தினார். பின்னர் தேவதாசி ஒழிப்புச் சட்டமாக மாறிய இம்மசோதா, இந்து கோவில் வளாகங்களிலோ அல்லது வேறு வழிபாட்டு இடங்களிலோ ‘‘பொட்டுக் கட்டும் சடங்கு’’ நடத்துவது சட்டத்திற்குப் புறம்பானதாகும் என அறிவித்தது. தேவதாசிகள் திருமணம் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான அனுமதியை வழங்கியது. மேலும் தேவதாசி முறைக்கு உதவிசெய்கிற தூண்டிவிடுகிற குற்றத்தை செய்வோர்க்கு குறைந்தபட்சம் ஐந்தாண்டு சிறை தண்டனை என ஆணையிட்டது. இம்மசோதா சட்டமாக மாறுவதற்கு 15 ஆண்டுகள் காத்திருந்தது. |

# 10th vol- I

# அலகு-5

# தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்:

**அறிமுகம்:**

- பொதுவாக மூலப்பொருட்களை எளிதில் பயன்படுத்தக் கூடிய பொருட்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு மனித நடவடிக்கையையும் நிறைவேற்றுமிடம் “தொழிற்சாலை” என்று அழைக்கப்படுகிறது. நுகர்வோருக்கும் மற்ற உற்பத்தியாளர்களுக்கும் தேவைப்படும் பொருட்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பெருமளவில் உற்பத்திச் செய்வது தொழில்மயமாதல் எனப்படும். தொலைபேசிகள் மற்றும் தொலைகாட்சிப் பெட்டிகள் போன்ற நுகர்வுப் பொருட்கள் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்திச் செய்கின்ற அதே வேளையில் தொழிற்சாலைகள் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உதிரிபாகங்கள் போன்றவற்றை உற்பத்திச் செய்கின்றன. ஒரு நாட்டின் உற்பத்தியானது எண்ணிக்கையையும் அதன் அளவையும் அதிகரிக்க ஒரு வரலாற்று அணுகுமுறையை நீண்ட காலமாக கொண்டுள்ளது, இதற்கு பல்வேறு முக்கிய காரணங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் தன்மை, தொழில் தொகுப்புகளின் முக்கியத்துவம் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் தொகுப்புகள் எவ்வாறு முன்னேறின என்பதையும் தொழில்களை மேம்படுத்துவதில் அரசு எடுக்கும் முயற்சிகளையும் அதன் பங்கினைப்பற்றியும் இப்பாடப்பகுதியில் நாம் அறிந்து கொள்வோம்.

**தொழில் மயமாதலின் முக்கியத்துவம்:**

- தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும் முன் நாம் ஏன் வேளாண்மையின் வளர்ச்சியுடன் அதன் பொருளாதார வருவாய் மற்றும் வேலைவாய்ப்பு குறைகிறது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக உணவுத் தேவையுடன் வருமானத் தேவையும் நிலையானதாக உள்ளது. எனவே, ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வோர் வேளாண்மை உற்பத்திப் பொருட்களுக்கு தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் செலவிடுகிறார்கள்.

- இரண்டாவதாக, நுகரப்படும் உணவும் பொருளாதார விரிவால் பல மாற்றங்களுக்கு உட்படுகிறது. அதனால் பல வட்டாரங்களுக்கிடையேயும், மக்களுக்கிடையேயும் வேளாண் தொழிலில் அதிக வேலைவாய்ப்பு முறை காணப்படுகிறது. உணவுப்பொருட்கள் நீண்ட தூரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பதப்படுத்தி முத்திரையிடப்படுகிறது. இதன் விளைவாக நுகர்வோர்கள் வாங்கும் விலையைவிட விவசாயிகள் பெறும் விலை குறைவாக உள்ளது.

- மூன்றாவதாக, நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக்கொள்வதில் ஆட்களை ஏற்பதில் சில வரையறைகள் பின்பற்ற நேரிடுகிறது. இதன் விளைவாக வேளாண்மை துறையில் உழைப்பாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடிவதில்லை. பெருமளவிலான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையை நம்பியிருப்பதாலும், கூலியை அதிகரிக்க வாய்ப்பில்லாததாலும் அதன் விளைவாக வறுமையின் அளவு தொடர்ந்து அதிகரிக்கிறது.

- இந்த அனைத்து காரணிகளின் விளைவாக வேளாண்துறையில் இருந்து விலகி, பொருளாதாரமானது உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பின் அடிப்படையில் ஒரு தேவையை ஏற்படுத்துகிறது. எனவே, பொருளாதார முன்னேற்றத்தில் அமைப்பு ரீதியிலான மாற்றத்தின் அவசியத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வேளாண்துறை அல்லாத துறைகளின் பங்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தொழில்மயமாதலால் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சியைக் காண்பதால் தொழில்மயமாதலின் முக்கியத்துவத்தைக் காணமுடிகிறது.

- தொழில்மயமாதல் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன நன்மைகளைத் தருகிறது.

- முன்னர் கூறியதுபோல் ஒரு பொருளாதாரத்தில் பிற உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளீடுகளை உருவாக்குது அவசியம். வேளாண் உற்பத்தித்திறன் அதிகரிக்க உரங்கள் மற்றும் டிராக்டர்கள் போன்ற தொழில்களுக்கு உள்ளீடுகள் தேவைப்படுகிறது.

- இரண்டாவதாக, உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் மற்றும் நுகர்வோர் பண்டங்கள் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒரு சந்தை நிலவுகிறது. அதே போல் வங்கி, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற பணிகள் தொழிற்சாலைகளின் உற்பத்தியைச் சார்ந்தே உள்ளது.

- மூன்றாவதாக, நவீன உற்பத்தி முறைகளை பயன்படுத்துவதன் மூலம் தொழில்கள் சிறந்த உற்பத்தித்திறனை அளிக்கின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்களின் உற்பத்தி செலவும் குறைகிறது. இதன் காரணமாக மலிவான விலையில் பண்டங்களை வாங்கிட உதவவும் மற்றும் அதிகளவு உற்பத்தித் தேவையை உருவாக்கவும் உதவுகிறது.

- நான்காவதாக, அத்தகையப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தொழில்மயமாதல் வேளாண்மையில் ஈடுபடும் அதிக உழைப்பாளர் சக்தியை ஈர்க்க உதவுகிறது. எனவே வேலைவாய்ப்பை உருவாக்குவது ‘‘தொழில் மயமாதலின்’’ ஒரு முக்கிய நோக்கமாகும்.

* ஐந்தாவதாக, தொழில்மயமாதலுக்கு நன்மை தருவது ''தொழில்நுட்ப மாற்றமே'' ஆகும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்மயமாதலின் முறைகளையும் அதன் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகிறது. அவற்றின் விளைவாக உழைப்பாளர்களின் உற்பத்தித்திறன் அதாவது. உழைப்பாளர்களின் உள்ளீடு அதிகரித்தது. இதனால் தொழிலாளர்கள் அதிக வருமானம் ஈட்ட உதவுகிறது.

* ஆறாவதாக, வருமானம் அதிகரிப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைக்கு வழி வகுக்கிறது. பொருளாதாரம் அத்தகைய தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான அளவு பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாவிட்டால் அது இறக்குமதியை நம்பியிருக்க வேண்டும். இதன் காரணமாக அதிகளவு அந்நிய செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதாரம் ஏற்றமதியில் போதுமான வருமானம் ஈட்டவில்லையென்றால் வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்வது கடினம். எனவே தொழில்மயமாதல் ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டவும் உதவுகிறது.

**தொழிற்சாலைகளின் வகைகள்:**

**தொழிற்சாலைகளை கீழ்க்கண்ட வகைகளில் வகைப்படுத்தலாம்.**

**அ. பயனர்கள்:**

வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது ''நுகர்வோர் பண்டங்கள் துறை'' என்றும் வெளியீடுகள் மற்றொரு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்டால் அது ''மூலதன பண்டங்கள் துறை'' என்றும் அழைக்கப்படுகிறது. சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற பிற தொழில்களுக்கு மூலப்பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தகைய தொழில்களை அடிப்படை பண்டங்கள் தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**ஆ. பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் வகை:**

''வேளாண் பதப்படுத்துதல்'' ஜவுளித்துறை, ரப்பர் உற்பத்தி, தோல் பொருட்கள் போன்ற மூலப் பொருட்களை பயன்படுத்தும் அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துகின்றனர்.

**இ. நிறுவன உரிமையாளர்கள்:**

தொழிற்சாலைகளானது தனியாருக்கு சொந்தமான, பொது உரிமையாளர்(மத்திய அல்லது மாநில அரசாங்கத்தால்) தனியார் மற்றும் பொதுத்துறை (கூட்டுறவாக) இரண்டிற்கும் சொந்தமானது அல்லது கூட்டுறவுக்கு சொந்தமாதாகவும் உள்ளன.

**ஈ.அளவு:**

நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி, விற்பனை, முதலீடு அல்லது வேலைவாய்ப்பு அவற்றின் அளவின் அடிப்படையில் பெரியதாகவோ,

சிறியதாகவோ அல்லது நடுத்தரமாகவோ இருக்கலாம். ஒரு நிறுவனம் சிறியது, நடுத்தரம் அல்லது பெரியது என்பதைத் தீர்மானிக்க இந்திய அரசு பொதுவாக முதலீட்டை அளவுகோலாகப் பயன்படுத்துகிறது, சிறிய நிறுவனங்களை விட அளவில் சிறயதாக இருக்கும் நுண்ணிய அல்லது மிகச்சிறிய நிறுவனங்களும் உள்ளன. இந்த வகைப்பாடு முக்கியமானது, ஏனென்றால் சிறிய நிறுவனங்களுக்கு அவற்றை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பெருமளவு நிதி, உள்கட்டமைப்பு அல்லது மானிய உதவிகளை வழங்குகிறது.

- சிறிய நிறவனங்கள் இரண்டு காரணங்களால் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. முதலாவதாக, இது பெரிய அளவிலான துறையை விட அதிக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது என்று நம்பப்படுகிறது. பெரிய நிறுவனங்களானது மிகவும் மேம்படுத்தப்பட்ட மற்றும் தானியங்கி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதால் அது போதுமான அளவு வேலைவாய்ப்பை உருவாக்குவதில்லை. இரண்டாவதாக, சிறிய அளவிலான துறை குறைந்த எண்ணிக்கையிலான சலுகைப் பெற்றப் பின்னணியில் இருந்து ஏராளமான தொழில் முனைவோரை வெளிப்படுத்த அனுமதிக்கிறது.

- 1980 ஆம் ஆண்டு வரை பெரிய நிறுவனங்கள் மிகவும் திறமையானவை மற்றும் சிறிய நிறுவனங்களை எதிர்த்துப் போட்டியிட முடியும் என்று பரவலாக நம்பப்பட்டது. ஆனால் தற்போது உலகின் பல்வேறு பகுதிகளில் தொழில்மயமாதல் அனுபவங்களின் அடிப்படையில் ஒரு துறையில் நிபுணத்துவம் வாய்ந்த சிறிய நிறுவனங்கள் புவியியல் ரீதியாக குறிப்பிட்ட இடங்களில் குவிந்து உற்பத்தி மற்றும் கற்றலின் மூலம் பெரிய நிறுவனங்களின் திறன் இல்லாவிட்டாலும் அதற்கு ஈடு கொடுக்கும் அளவில் உள்ளதென நம்பப்படுகிறது. இத்தகைய சிறிய நிறுவனங்களின் தொகுப்புகளே “தொழில்துறை தொகுப்புகள்” என்று அழைக்கப்படுகின்றன.

### தொழில் தொகுப்புகள் (Industrial Clusters):

- தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும். தொகுப்புகளின் முக்கிய அம்சம் நிறுவனங்களுக்கிடையேயான ஒரு பரஸ்பர தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். சிறப்பான தொழில் தொகுப்பினைப் பெற்றிருக்கும் நிறுவனங்கள் உற்பத்திச் செயல்முறைகளுக்கு உள்ளீடுகளை வழங்குதல் அல்லது தொகுப்புகளிடையே மற்றொரு நிறுவனத்தின் வெளியீட்டை ஈர்த்தல் போன்றவை தொகுப்புகளின் போட்டித்தன்மைக்கு முக்கியமானதாகும். இங்கிலாந்தில் உலோகம் மற்றும் நெசவு தொழிலில் ஈடுபட்ட சிறிய நிறுவனங்களின் செயல்பாடுகளின் தொகுப்பினை புரிந்துகொள்ள 1920களில் புகழ்பெற்ற பொருளாதார அறிஞரான ஆல்ஃபிரட் மார்சல் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்த பொழுது தொழில் தொகுப்பு அல்லது மாவட்டங்களின் நன்மைகளை முதன் முதலில் கண்டறிந்தார். 1980-களில் இத்தாலியில் சிறிய நிறுவனங்கள் வெற்றி பெற்ற பின்னர்தான் மார்ஷலின் “தொழில்துறை மாவட்டம்”(Industrial

District) என்ற கருத்து பிரபலமாக்கப்பட்டது. இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் கொள்கை-வகுப்பாளர்கள் தங்களுடைய நாட்டில் இது பொன்ற பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்பினை உணர்ந்ததால் அவற்றினை ஊக்குவிக்கத் தொடங்கினர்.

**வெற்றிகரமான தொழில் தொகுப்புகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:**

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.(SMEs)
- துறை சார்ந்த சிறப்பு கவனம்
- நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
- புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி
- நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள்
- சுய உதவி குழுக்கள் செயல்படுதல்
- வட்டார மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு

- போன்றவற்றால் நிறுவனங்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரமாக ஒத்துழைத்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேலையில் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் அவர்கள் தங்கள் திறனை விரிவுபடுத்த முடியும். போட்டியின் மூலம் அவர்கள் மிகவும் திறமையானவர்களாக மாற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். சென்னை வட்டாரத்தைத் தவிர தொழிற்துறை வளர்ச்சியானது மாநிலம் முழுவதும் பல்வேறு சிறிய நகரங்களில் தொழில் தொகுப்புகள் மேற்கு வட்டாரத்திலேயே குவிந்துள்ளன. இந்த தொகுப்புகளின் பல்வேறு செயல்பாடுகளாக ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்காரப் பொருட்கள் உற்பத்தி, ஜவுளி, தோல், கோழி வளர்த்தல், கயிறு தயாரித்தல், போக்குவரத்து உபகரண பணிகள், பொறியியல் பணிகள், தானியங்கி உதிரி பாகங்கள் தயாரித்தல் போன்றவைகள் ஆகும்.

**தொழில்தொகுப்பு எவ்வாறு தோன்றுகிறது?**

- தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஒரு சில தொழிற் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இல்லையெனில், சில துறைகளில், ஒரு பெரிய நிறவனம் நிறுவப்படும்போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக ஒரு தொழில் தொகுப்பு நிறுவனங்கள் தேன்றக்கூடும். சில நேரங்களில், வட்டாரத்திலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம், இது தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு வழிவகுக்கும்.

## தமிழ்நாட்டின் தொழில்மயமாதலின் முன்னேற்றம் பற்றிய வரலாறு:

- தமிழ்நாட்டில் காலனித்துவ முன்காலத்தில் ஜவுளி, கப்பல் கட்டுமானம், இரும்பு மற்றும் எ.்.கு தயாரித்தல் மற்றும் மண்பாண்டங்கள் தயாரித்தல் போன்ற தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான ஏராளமான சான்றுகள் உள்ளன. தமிழ்நாடு பரந்துவிரிந்த கடற்கரையைக் கொண்டுள்ளதால், பல நூற்றாண்டுகளாக தென் கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டது. தொழிற்புரட்சிக்கு பிறகு இங்கிலாந்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரங்களின் இறக்குமதியின் காரணமாகப் போட்டி நிலவி கைத்தறி நெசவுத்தொழில் வீழ்ச்சிக்கு காலனித்துவ கொள்கைகளும் பங்களித்தன. இருந்தபோதிலும் சில தொழில்கள் காலநித்துவ காலத்தில் வளர்ந்தன. மேலும் மாநிலத்தில் தொழில்மயமாதலுக்கான அடிப்படையாக விளங்கியது.

## காலனித்துவ காலத்தில் தொழில்மயமாதல்:

- காலனித்துவ காலத்தில் தொழில் மயமாதலில் இண்டு காரணிகள் பெரும்பங்கு வகித்தது. முதலாவதாக, மேற்கு மற்றும் தெற்கு தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பருத்தி சாகுபடி அதிகளவு நெசவுத்தொழில் தோன்றுவதற்குக் காரணமாகவும் இருந்தது. இந்த பருத்தி நெசவுத்தொழிலில் விதை நீக்குதல், அழுத்துதல், நெசவு மற்றும் நூற்பு போன்ற செயல்பாடுகளில் ஈடுபட வழிவகை செய்தது. மேலும் ரயில்வே துறையின் அறிமுகமானது பருத்தி நூல் சந்தையை விரிவுபடுத்தவும், இந்த தொழில் வளர ஒரு காரணமாகவும் இருந்தது.

- இரண்டாவதாக, இந்த காலகட்டத்தில் வாணிபத்தின் வளர்ச்சியானது சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுக வட்டாரங்களின் அருகாமையில் தொழிற்சாலைகள் உருவாக காரணமாகவும் இருந்தது. மேலும் சென்னையை சுற்றி வாகனங்கள் மற்றும் தோல் தொழிற்சாலை வளர்ச்சியைக் கண்டது. தென் தமிழ்நாட்டில் வெல்லம் உற்பத்தி தொழிற்சாலையின் வளர்ச்சி மற்றொரு சிறந்த உதாரணமாகும். மேலும், காலனித்துவ காலத்தில் சிவகாசியில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு பின்னர் பட்டாசு உற்பத்தி மற்றும் அச்சுத் தொழிலுக்கு முக்கிய மையமாக மாறியது. துறைமுகம் சார்ந்த தொழில்களும் இதே காலகட்டத்தில் இப்பகுதியின் வளர்சிக்குக் காரணமாகவும் இருந்தது. தோல் உற்பத்தித் தொழிலானது திண்டுக்கல், வேலூர், ஆம்பூர் ஆகிய பகுதியில் நடைபெற்றது.

- தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் நெசவுத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியானது, இயந்திரங்களின் தேவையையும் அதற்கான தொழிற்சாலைகளையும் நிறுவ காரணமாகவும் இருந்தது. இந்த நெசவு இயந்திரத் தொழிற்சாலைகளுக்கான இயந்திர உதிரி பாகங்கள், பழுது பார்த்தல் மற்றும் உற்பத்தி செய்வதற்கான சிறிய அளவிலான

தொழிற்சாலைகள் அதிக அளவில் வளர்ச்சி அடைந்தன. 1930களில் தமிழகத்தின் மேற்குப் புகுதியில் நீர் மின் சக்தியில் இருந்து மின்சாரம் உற்பத்தி மற்றொரு முக்கிய தொழில் வளர்ச்சி ஆகும். நிலத்தடிநீரை உறிஞ்சுவதற்கு பயன்படத்தப்படும் எண்ணெய் இயந்திரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மின்சாரம் கிடைத்தமையால், வேளாண்மைத் தொழில் விரிவடைந்ததுடன் எண்ணெய் இயந்திரங்களின் தேவையும் அதிகரித்தது. இதன் காரணமாக, இதனை சார்ந்த எண்ணெயங் இயந்திர உதிரிபாகங்கள் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள் அதிகளவில் உருவாயின. இதனால் உலோகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேளாண்மை சார்ந்த இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன.

**சுதந்திரத்திற்குப் பின் 1990களின் முற்பகுதியில்:**

- தொழில் வளர்ச்சியானது சுதந்திரத்திற்குப் பிறகு மத்திய மற்றும் மாநில அரசுகளால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல பெரிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. சென்னையில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் ரயில் பெட்டித் தொழிற்சாலையும் திருச்சிராப்பள்ளியில் கொதிகலன் மற்றும் விசையாழிகள் தயாரிப்பதற்காக பாரத கனரக மின்சாதன நிறுவனத்தை (Bharat Heavy Electricals Limited (BHEL) மத்திய அரசு நிறுவியது. BHEL நிறுவனம் அதனுடைய உள்ளீட்டுப்பொருட்கள் தேவைகள் தொடர்பாக பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்புகளின் தோற்றத்திற்கு வழிவகை செய்தது. சென்னை புறநகரில் உள்ள ஆவடியில் போர் தளவாடங்கள் தயாரிக்க கனரக வாகனத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனமும் சென்னையில் மகிழுந்துகளை உற்பத்திச் செய்யத் தொடங்கியது. அசோக் மோட்டார்ஸ் (பின்னர் ஆசோக் லேலண்ட்) ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் இணைந்து சென்னை வட்டாரத்தில் வாகனத்தொழில்துறை தொகுப்புகள் வளர்ச்சிக்கு உதவியது. மேலும் இது வாகன உதிரி பாகங்களின் நகரமாக மாறியது. 1950களில் இப்பகுதியில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வாகன கூறுகளை வழங்குவதற்கு சிறிய மற்றும் நடத்தர அளவிலான நிறவனங்களுக்கு உதவியாக ஆவடியில் தொழில் தோட்டங்கள் நிறுவப்பட்டது. மாநிலத்தில் அதிக நீர் மின்சக்தி திட்டங்கள் மூலம் மின்மயமாதலை பரவலாக அதிகரிக்க வலியுறுத்தப்பட்டது, இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு பெரும் பங்கு வகித்தது. 1973-ஆம் ஆண்டில் எ்கு உற்பத்தி செய்வதற்காக சேலத்தில் இரும்பு எ்கு ஆலை அமைக்கப்பட்டது.

- கோயம்புத்தூர் பகுதியில், ஜவுளி, ஜவுளி இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள் மற்றும் நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்கான பம்ப் குழாய்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பன்முகத் தன்மையின் வளர்ச்சியைக் கண்டது.

- 1970 மற்றும் 1980களில் கோயம்புத்தூர் பகுதியில் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் அதேபோல் திருப்பூரில் பின்னலாடைத் தொழில்

தொகுப்புகள் விரிவாக்கம் மற்றும் கரூரில் வீட்டு அலங்காரப் பொருட்கள் தொழில்துறை தோட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறவனங்கள் ஊக்கப்படுத்தப்பட்டது. மாநிலத்தில் பின்தங்கிய வட்டாரங்களில் தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கு இத்தகைய கொள்கை முயற்சிகளை பயன்படுத்தி வெற்றி பெறச் செய்வதற்கு ஒரு உதாரணமாக தமிழகத்தில் ஓசூரில் விரிவாக்கப்பட்ட தொழில் தோட்டங்களை சான்றாகக் கூறலாம்.

**தமிழ்நாட்டின தொழில்மயமாதல்:**

**தாராளமயமாதல் கட்டம்:**

- 1990களின் முற்பகுதியில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பிந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற தொழில் மயமாதலின் இறுதி கட்டம் ஆகும். இந்த சீர்திருத்தங்கள் மாநில அரசாங்கங்கள் வளங்களை திரட்டுவதற்கு பொறுப்பேற்கச் செய்தன. மேலும் அவை தொழில் மயமாதலுக்கு தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஒருவருக்கொருவர் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மலிவான நிலம், வரிச்சலுகைகள் மற்றும் மானியங்கள் போன்ற சலுகைகள், ஆனால் தரமான சக்திகள் மூலம் முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்க ஊக்கப்படுத்தின. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் நாணய மதிப்பிறக்கம் ஆகியவை ஏற்றுமதி சந்தைகளைத் திறக்க உதவியது. இது இரண்டு பெரிய முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.
- முதலாவதாக, வர்த்தக தாராளமயமாக்கலின் நடவடிக்கைகள் காரணமாக ஜவுளி, வீட்டு அலங்கார பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி விரைவாக வளரத் தொடங்கியது. இரண்டாவதாக, முதலீடுகளை ஈர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National ஊழஅியெநைள – MNCs) தமிழகத்தில் குறிப்பாக வாகனத்துறையில் நுழைவதற்கு வழிவகுத்தன. வாகனத் தொழில்துறை வாகன பொருட்கள் தயாரிப்பவர்களையே பெரிதும் நம்பி இருந்தன. பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவு மற்ற பன்னாட்டு நிறுவன வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பவர்களை கொண்டு வரவில்லை. நகரின் புற நகரில் நோக்கியா, ஃபாக்ஸ்கான், சாம்சங், மற்றும் பிலக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற ஆலைகள் பன்னாட்டு நிறுவனங்களுடன் சென்னை வட்டாரத்திலும் மின்னணுத் துறையின் மின்னணுத் துறையின் மையமாக உருவெடுத்தது. ஆனால் உள்நாட்டு உதிரிபாக பொருட்கள் தயாரிப்பளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கத் திறந்தது. ஒரு குறிப்பிடத்தக்க பங்கு முதலீட்டினால் சென்னை எல்லையில் உள்ள மாவட்டங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones-SEZs) உருவாக்கப்பட்டன. உற்பத்தி முதலீடுகளை ஈர்ப்பதற்காக சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (SEZs) வழிகளைப் பயன்படுத்தி

வெற்றியடைந்ததில் ஒரு முன் மாதிரியாக விளங்கிய தமிழ்நாடு பெரிதும் பாராட்டத்தக்கது.

- தமிழகத்தில் மிக நீண்ட காலமாக உருவாகிய முக்கிய தொழில்களான சர்க்கரை, உரங்கள், சிமெண்ட, விவசாயக் கருவிகள், இரும்பு மற்றும் எ.்.கு ரசாயனங்கள், மின்மாற்றிகள் மற்றும் காகிதங்கள் போன்றவையாகும்.

- இந்த காரணிகளின் விளைவாக தற்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் விட தமிழ்நாடு அதிக தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. மேலும் உற்பத்தித் துறையில் வெலைப்பணி இடங்களிலும் அதிகப் பங்கினை பெற்றுள்ளது. முக்கியமாக மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற முன்னேறிய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இது அதிக உழைப்பு மிகுந்ததாகும். வாகன தொழில்கள், தானியங்கி கூறுகள், இலகுரக மற்றும் கனரக பொறியியல், இயந்திரங்கள், பருத்தி ஜவுளி, ரப்பர், உணவுப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள், இராசயனங்கள் மற்றும் தோல் பொருட்கள் போன்றவைகள் முக்கியத் தொழில்களாகும். மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் (13 மாவட்டங்களில் 27 தொழில் தொகுப்புகள்) தொழில்துறைகள் பரவியிருக்கின்றன. மேலும் அவற்றுள் பல தொழில்கள் ஏற்றமதி சார்ந்தவையாகும். மாநிலத்தின் சாலைகள், ரயில் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து மற்றம் முக்கிய துறைமகங்கள் அனைத்தும் போக்குவரத்து இணைப்பினால் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது.

- தொழில்மயமாதல் பரவலினால் தொழில் முனைவோர்களின் சமூக நலத்தினை வரிவுபடுத்தியது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் வணிக சமூகங்கள் வட இந்திய தொழில் முனைவோர் மற்றும் வணிகக் குழுக்களைப் போல் அல்லாமல் ஒரு பின்தங்கிய சமூக பின்னணியில் இருப்பதனால் ஒரு வியாபாரத்தினைத் தொடங்குவதற்கு மூலதனத்தின் ஒப்பீட்டளவில் ஒரு சிறிய அளவிலேயே முதலீடு செய்யப்படுகிறது. ஆனால் தமிழ்நாடு தொழிற்சாலைகளின் அதிகப்படியான பரவலை பெற்றுள்ளது, தமிழகத்தில் பெரிய, சிறிய மற்றும் வீட்டு தொழில்கள் உள்ளது. இந்த பரவலான தொழில்மயமாதல் மற்றும் நகரமயமாதலின் செயல்முறைகளால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் சிறந்த கிராம மற்றும் நகர்ப்புற இணைப்புகளுக்கு வழிவகுத்தது.

**தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை தொகுப்புகள் மற்றும் அவற்றின் சிறப்புகள்:**

**தானியங்கி தொகுப்புகள்:**

- சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறை தளமாக இருப்பதால் “ஆசியாவின் டெட்ராய்ட்” என்று அழைக்கப்படுகிறது. சென்னையானது மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமை இடமாகத் திகழ்கிறது. சில உள்நாட்டு நிறுவனங்களான TVS,TI சைக்கிளஸ், அசோக் லேலண்ட் மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ்

ஆகியன இதற்கு முன்னர் இருந்தன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின்னர் ஹுண்டாய், ∴போர்டு, டைம்லர்பென்ஸ் மற்றும் ரெனால்ட்-நிசான் போன்ற பல பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Companies) (MNC) இப்பகுதியில் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளன. எனவே வெளிநாடுகளிலிருந்து பல உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளரின் கவனங்கள் இங்கே ஈர்க்கப்பட்டுள்ளது. பல உள்நாட்டு நிறுவனங்களும் சேர்ந்து அனைத்து நிறுவனங்களுக்கான உதிரி பாகங்களின் உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

- ஓசூர் மற்றொரு தானியங்கி தொகுப்பாகும். இங்கு TVS மற்றும் அசோக்லேலண்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை இயக்கி வருகின்றன. கோயம்புத்தூர் பகுதி ஒரு தானியங்கிகளின் தொகுப்பாக வளர்ந்து வருகிறது.

**வாகன மற்றும பேருந்து கட்டுமானத் தொழில் தொகுப்புகள்:**

- தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழுபாக கட்டமைப்பிற்கான தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்ற இடங்களாகும். சுமை தூக்கும் வாகனக் கட்டுமானத் துறையில் 150 தொழில்களில் 250அலகுகளில் இந்த தொகுப்பில் 12 பெரிய அளவிலான சுமை தூக்கும் வாகனக் கட்டுமான துறைகள் உள்ளன. 50க்கும் மேற்பட்ட அலகுகளைக் கொண்டு கரூர் மற்றொரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. பல தொழில் முனைவோர்கள் பெரிய அளவிலான வாகனக் கட்டுமானத் துறையில் பணி புரிந்து தற்போது தங்கள் சொந்த அலகுகளை அமைக்க முன்வந்துள்ளனர்.

**நெசவுத்தொழில் தொகுப்புகள்:**

- இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத்தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது. காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் ‘‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’’ என அழைக்கப்படுகிறது. தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ சுற்று வட்டார பகுதிகளாகும். எனவே நமது நாட்டின் மிகப்பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.

- கோயம்புத்தூரைச் சுற்றி அருகிலுள்ள பல்லடம் மற்றும் சோமனூர் சுற்றி சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் நன்கு செயல்படும் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் தங்களது வீடுகளிலேயே சொந்தமாக உற்பத்தி செய்கின்றன. ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத்தறித் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.

- திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும். இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80/ பங்கினைக் கொண்டுள்ளது. 1980களின் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது உள்நாட்டுச் சந்தையில் ஒரு மிகப்பெரிய வெற்றியின் காரணமாக உலகச் சந்தையில் உலகின் தெற்கு அரைக் கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது. ஆரம்பத்தில் உள்ளூர் தொழில்முனைவோரால் பெரும்பாலான நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. தற்போது இந்தியாவின் மிகப்பெரிய முன்னணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர்.

**உலகளாவிய தெற்கு நாடுகள்:(Global South)**

தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் உலகளாவிய தெற்கு நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

- வாகனக் கட்டுமானத் தொழிலமைப்பைக் தவிர மேசைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்கார பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது. மேலும் பவானி மற்றும் குமாராபாளையம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரை விரிப்புகளை உற்பத்திச் செய்யும் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன.

- இத்தகைய நவீன தொகுப்புகளைத் தவிர பட்டு மற்றும் கைத்தறிப் புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகளும் உள்ளன. இந்த விசைத்தறி தொகுப்புகளில் பல அலகுகள் பயன்படுத்தியதன் மூலம் புதுமைமயமாதலின் அளவை அடைந்தன.

**தோல் மற்றும் தோல் பொருட்களின் தொகுப்பு:**

- இந்தியாவின் 60% தோல் பதனிடும் உற்பத்தித்திறனையும் 38% தோல் காலனிகள் மற்றும் தோல் உதிரி பாகங்கள் அதனைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தியையும், தமிழ்நாடு பெற்றிருக்கிறது. வேலூர் அதனைச் சுற்றியுள்ள ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் உற்பத்தி மற்றும் பதனிடும் வசதியைக் கொண்டுள்ளது. தோல் பொருட்கள் ஏற்றமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக வேலூர் திகழ்கிறது. சென்னையிலும் பல தோல் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றமதி தொழிற்சாலை நிறுவனங்கள் உள்ளன. திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தோல் பதனிடுதல் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலையின் தொகுப்பு காணப்படுகிறது. தோல் உற்பத்தித் தொழிற்சாலையும் வேலைவாய்ப்பை அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சிடுதல் தொகுப்பு:**

- தீப்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும். சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாகத் திகழ்கிறது. இந்தியா 90% பட்டாசு உற்பத்தி 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக இதனையே சார்ந்துள்ளது. அச்சிடும் தொழிற்சாலை ஒவ்வொன்றும் அவற்றின் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில் தொடங்கப்பட்ட இத்தொழிலானது தற்பொழுது அதிகளவில் வேலைவாய்ப்பை அளிக்கிறது.

**மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுப்புகள்:**

- 1990-களில் ஏற்பட்ட பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் வந்த நோக்கியா, ∴பாக்ஸ்கான், மோட்டோரோலா, சோனி எரிக்ஸன், சாம்சங் மற்றும் டெல் போன்ற வன் பொருள் மற்றும் மின்னணு பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் கைபேசி கருவிகள், சுழல் பலகைகள், நுகர்வோர் மின் சாதனப்பொருள் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தன. இந்நிறுவனங்கள் சென்னையைச் சுற்றியுள்ளன. பகுதிகளில் நிறுவனங்களை நிறுவின.

- நோக்கியா நிறுவனம் மூடப்பட்ட போதிலும் சென்னை தொடர்ந்து நாட்டின் மின்னணு சாதனை உற்பத்தியின் மையமாகவே உள்ளது.

- அதேபோல் மென்பொருள் உற்பத்தித்துறை விரிவாக்கம் சென்னையிலும் குறிப்பிட்ட அளவு கோயம்புத்தூரிலும் மென்பொருள் உற்பத்தி சேவையில் சிறந்த மையங்களாக விளங்குகிறது.

**குறிப்பிட்ட சில தகவல்தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள்:**

- வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு (Tier-II) நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஒசூர் மற்றும் சேலம் தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கான இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனை எளிதாக்குவதற்காக ELCOT நிறுவனம் பின்வரும், எட்டு இடங்களில் ELCOSECs (IT குறிப்பிட்ட பொருளாதார சிறப்பு மண்டலங்கள்) நிறுவியுள்ளது.

❖ சென்னை – சோழிங்கநல்லூர்
❖ கோயம்புத்தூர் - விளாங்குறிச்சி
❖ மதுரை - இலந்தை குளம்
❖ மதுரை – வடபாலஞ்சி, கிண்ணிமங்கலம்
❖ திருச்சிராப்பள்ளி – நாவல்பட்டு

- மாநிலத்தின் அலகுகளை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் ELCOSEZs மூலம் வசதிகள் வழங்கப்படுகிறது. புதிய இடங்களில் ELCOSEZs அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தேவை மற்றும் நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. (வரைபட தகவல் தொழில்நுட்பக் கொள்கை-2018-19)

❖ திருநெல்வேலி – கங்கைகொண்டான்
❖ சேலம் - ஜாகீர் அம்மாபாளையம்
❖ ஓசூர் - விஸ்வநாதபுரம்

**தமிழ்நாட்டில் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு உதவும் கொள்கைக் காரணிகள்:**

கொள்கைக் காரணிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**கல்வி:**

- திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்கக் கல்விக்காக அதிகமான கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின், எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் அடிப்படை எண் கணித திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களைத் தருவதிலும் பெயர் பெற்ற இடமாகும். இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையம் போன்றவைகளின் புகலிடமாக தமிழகம் உள்ளது.

**உள்கட்டமைப்பு:**

- மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார வநியுயோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது . மின்சார விநியோகம் மட்டுமல்லாது. தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் போனது ஆகும். குறிப்பாக கிராமப்புற சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகரபுறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளது. சிறு உற்பத்தியாளர்களை சிறந்த சந்தைகளோடு இணைத்து அவர்களுக்கு நற்பலனைக் கொடுக்கிறது.

**தொழில்துறை ஊக்குவிப்பு:**

- கல்வி, போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல், சிறந்த தொழிற் பிரிவுக்கான தொழிற்சாலை விரிவாக்கங்களை சிறந்த தொழிற்சாலை விரிவாக்கங்களை

சிறந்த பகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கிக் கருவிகள், உயிரி தொழில்நுட்பம் மற்றும் செய்தி மற்றம் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பெரிய, சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் மேம்படுத்த உதவும் ஆதரவான உள்கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில்துறை மேம்பாட்டு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

**தமிழகத்தில் தொழில் விரிவாக்கத்திற்கு:**

**திறவுகோலாக செயல்பாடுகள் முகமைகள்:**

**தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT – State Industries Promotion Corporation of Tamil Nadu), 1971.**

- தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (Sipcot) என்பது 1971இல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழிற் தோட்டங்களை அமைத்தது,

**தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO-Tamil Nadu Smal Industries Development Corporation) 1970**

- தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்த்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது.

**தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் (TIDCO – Tamil Nadu industrial Development Corporation)1965**

- நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் - வரையறுக்கப்பட்டது. (TIIC – Tamil Nadu Industrial Investment Corporation Ltd) 1949**

- புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில் பிரிவுகளை பெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது. அனைத்து வகையான தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் என்றாலும் குறிப்பாக 90% மிகச்சிறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இது உதவுகிறது.

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones-SEZs)**

நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை ஏப்ரல் 2000ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. SEZ அலகுகளில் சுய சான்றிதழ் அடிப்படையில் அலகுகள் அமைக்கப்படலாம். பொதுத்துறை, தனியார் துறை அல்லது கூட்டுத் துறை அல்லது மாநிலங்களில் SEZ அமைப்பதற்கான கொள்கை வழங்கப்படுகிறது. தற்போதுள்ள சில ஏற்றுமதி செயலாக்க மண்டலங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக மாற்றப்படும்.

**அதன்படி, பின்வரும் இடங்களில் அமைந்துள்ள ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசு அமைத்துள்ளது.**

நாங்குநேரி SEZ - பல்நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி

எண்ணூர் SEZ - அனல்மின் திட்டம், வயலூர்

கோயம்புத்தூர் SEZ - தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள்

ஓசூர் SEZ - தானியங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு

பெரம்பலூர் - பல்நோக்கு உற்பத்தி SEZ

தானியங்கி நகரம் - தானியங்கள்/தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர் (Auto city) SEC

இந்தியா-சிங்கப்பூர் - IT/ITEs, மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள்-திருவள்ளூர் மாவட்டங்கள்

உயிரி-மருந்துகள் SEZ - மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மையம், மைய மீள் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி.

**மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (Madras Export Processing Zone)**

மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். இது அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.

**தமிழ்நாடு சிறுதொழில் கழகம் - வரையறுக்கப்பட்டது. (TANSI – Tamil Nadu Small Industries Corporation Ltd)1965**

- தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, வரும் சிறுதொழில் அமைப்புகளை 1965இல் தமிழ்நாடு

சிறுதொழில் கழகமானது (TANSI) தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில்துறை நிறுவனமாகும்.

**தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் பணிகள் துறை:**

- தொழில்நுட்ப மாற்றங்களால், தொழிற்சாலைகளில் பணியாளர்களை பணிக்கு நியமிப்பது என்பது முடியாதது ஆகிறது. தானியங்கிகளின் பயன்பாட்டால், உற்பத்தியில் தொழிலாளர்களின் தேவையானது குறைத்துவிட்டது. கடந்த மூன்று சகாப்பதங்களாக மிக அதிகமான பணியாளர்கள், பணிகள் துறையினால் பணி அமர்த்தப்பட்டனர். சில முக்கியமான மற்றும் சக்தி வாயந்த தொழில் பிரிவுகளான மென்பொருள் பணிகள், சுகாதாரம் மற்றும் கல்வி துறைக்கான சக்தி வாயந்த இடமாக தமிழகம் திகழ்கிறது. சுகாதாரம் மற்றும் கல்வித் துறையானது சென்னை மற்றம் கோயம்புத்தூரிலும் பரவலாக செயல்படுகிறது. மென்பொருள் சேவைகள் மிக அதிகமாக சென்னையிலேயே குவிந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக, சில மென்பொருள் நிறுவனங்கள் கோயம்புத்தூருக்கு மாறியுள்ளன.

**தொழில்மயமாதலின் பிரச்சனைகள்:**

- தமிழகம், நமது நாட்டின் சிறந்த தொழில்மயமான மாநிலமாக இருந்த போதிலும் சில குறைகளை சந்திக்க வேண்டியுள்ளது. வேதிப்பொருட்கள், ஜவுளித்துறை மற்றும் தோல் தொகுப்புகள் மூலம் வரும் திரவக் கழிவுகள் நமது சுகாதாரத்தை கெடுக்கிறது. இந்த திரவக் கழிவுகள் சேரும் நீர் நிலைகளை மட்டுமல்லாமல் அதையொட்டியுள்ள விவசாய நிறுவனங்களையும் மாசுபடுத்துகிறது. இந்த குறைகள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியதாகும். உலகளாவிய அளவில் போட்டிப் போடுவதற்காக முதன்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதால் நிலையான வேலை வாய்ப்புக்கான குறை ஏற்படுகிறது. பணியாளர்களின் தரமானது இன்றைய காலகட்டத்தில் தற்காலிகமாக பணியமர்த்துவதால் குறை ஏற்படுகிறது. இந்த குறையும் உடனடியாக கொள்கை வகுப்பாளர்கள் கவனிக்க வேண்டிய ஒரு குறை ஆகும்.

**ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் (தொடங்கப்பட்டது: ஜனவரி 16,2016)**

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல்.

**ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (தொடங்கப்பட்டது: ஏப்ரல் 5,2016)**

ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வெளி (புசநநகெைடன நுவெநசிசளைந) நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 இலட்சத்துக்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் (ளுஊ) அல்லது பட்டியல் பழங்குடியினர் (ளுவு) மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என கடன் வழங்கி வங்கிக்கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

**தொழில் முனைவோர்:**

- ஒரு "தொழில் முனைவோர்" என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன்கள், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

**தொழில் முனைவு:**

- தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும். இவை ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

**தொழில் முனைவோரின் பங்கு:**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

1. தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றத்தாழ்வுகளை நீக்குகிறார்கள்.

2. இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.

3. வருமானம் மற்றும் செல்வத்தின் செறிவைக் குறைப்பதன் மூலம் அவை சமூகத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.

4. குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தைச் செயல்பட வைக்கிறார்கள்.

5. தொழில்முனைவோர் கைவினைஞர்கள், தொழில் நுட்பத் தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள். தொழில்நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.

6. தொழில்முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர். இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகிறது.